பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
14 06 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசியாவில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் உட்பட பல்வேறு நகரங்கள் மீது நேற்றிரவு ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

3. ஐரோப்பாவில் இந்தியாவின் மிகவும் நம்பிக்கையான வர்த்தக கூட்டாளியாக பிரான்ஸ் திகழ்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

4. தெலங்கானாவில் நடப்பு கல்வியாண்டில் 571 புதிய அரசு பள்ளிகள் தொடங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**

மேற்காசியாவில் தற்போதுள்ள நிலைமை குறித்து இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹு, பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கினார்.

இப்பகுதியில் விரைவாக அமைதியும், ஸ்திரத்தன்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த உரையாடலின் போது தாம் வலியுறுத்தியதாக சமூகவலைதளத்தில் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு. **Gideonsaar,** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றங்கள் குறித்து விளக்கினார்.

**>>>>>><<<<<<**

இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் உட்பட பல்வேறு நகரங்கள் மீது நேற்றிரவு ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

நேற்று ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகள் மற்றும் ராணுவ உயரதிகாரிகள், அணுசக்தி விஞ்ஞானிகள் ஆகியோரை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதலை நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இது, கடுமையான தண்டனை நடவடிக்கை என்று ஈரான் கூறியுள்ளது.

ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் தொடர்ச்சியாக இஸ்ரேலின் முக்கிய நகரங்கள் மீது ஏவப்பட்டதால், இஸ்ரேல் முழுவதும் சைரன் ஒலி எச்சரிக்கை எழுப்பப்பட்டது.

இதனால், தலைநகர் டெல்அவிவ் மற்றும் ஜெருசலேம் நகரில் லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

1980-களில் ஈரன்-ஈராக் போருக்குப் பின்னர், இஸ்ரேல் தனது முக்கியமான ராணுவ தாக்குதலை நடத்திய சில மணி நேரங்களுக்குப் பிறகு, ஈரான் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

ஈரானின் தாக்குதலை, இஸ்ரேலின் **Ben Gurion** விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது.

ஆயிரக்கணக்கான இஸ்ரேல் ராணுவ வீரர்கள் முன்னெச்சரிக்கையாக தயார்நிலையில் உள்ளனர்.

ஈரானிலிருந்து ஏவப்பட்ட 12க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை நடுவானில் வழிமறித்து அழித்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தடுப்புகளையும் மீறி, ஏராளமான ட்ரோன்களும், ஏவுகணைகளும், மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகள் மீது ஏவப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்,இஸ்ரேல் தான் போரை தொடங்கியதாகவும், ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உரிய பதிலடி தரப்படும் என்றும், அது இஸ்ரேலுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஈரான் நாட்டின் உயர் தலைவர் திரு. **Ayatollah Ali Khamenei** எச்சரித்துள்ளார்.

தொடர்ந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரானிய புரட்சிப் படையினர் தயார் நிலையில் உள்ளதாக ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை கண்டித்துள்ள இஸ்ரேல், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Israel Katz,** மக்கள் அதிகமாக வசிக்கும் இருப்பிடங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், இதற்கு உரிய பதிலடி தரப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஈரான் – இஸ்ரேல் இடையே பல ஆண்டுகளாக நிழல் யுத்தம் நடைபெற்று வந்த நிலையில், தற்போது நேரடி மோதலாக அது மாறியுள்ளதால், மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

>>>>>><<<<<<

நாட்டில் எரிபொருள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய பெட்ரேலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பெட்ரோலியத்துறை செயலர் மற்றும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் உயரதிகாரிகளுடன் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்தார்,

இஸ்ரேல் – ஈரான் இடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை நேற்று கடுமையாக உயர்ந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெட்ரோலியப் பொருட்களின் விலையை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருக்கும் யுக்தியை கடைபிடித்து வருவதாகவும் இதனால் நுகர்வோருக்கு எந்தவித சிரமமும் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஐரோப்பாவில் இந்தியாவின் மிகவும் நம்பிக்கையான வர்த்தக கூட்டாளியாக பிரான்ஸ் திகழ்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் துறைமுக நகரமான **Marseille-**யில் நேற்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Jean Noel Barrot –**ஐ சந்தித்து பேசிய அவர், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு பிரான்ஸ் ஆதரவு தெரிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வர்த்தகம், பாதுகாப்பு, தூய்மையான எரிசக்தி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு குறித்து இருநாட்டு அமைச்சர்களும் ஆக்கபூர்வமான விவாதங்களை நடத்தினர்.

செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளித் துறையில் புதிய வாய்ப்புகளை கண்டறிவது தொடர்பாக பிரான்ஸ் அமைச்சருடன் கலந்துரையாடியதாக சமூகவலைதளப் பதிவில் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

தெலங்கானாவில் நடப்பு கல்வியாண்டில் 571 புதிய அரசு பள்ளிகள் தொடங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நேற்று பள்ளிக் கல்வி தொடர்பாக உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்யும் என்று தெரிவித்தார்.

இதற்கு தேவையான நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்றும் அவர் கூறினார்.

பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை விரைந்து செய்து தருமாறும், மாணவர்களின் மொழித்திறன் மற்றும் திறன் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

தில்லியில் விரைவில் புதிய கலால் வரி கொள்கையை வெளியிடப்படும் என்று முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

மதுபான விற்பனை மற்றும் விநியோகத்தில் வெளிப்படையான நடைமுறையை உறுதிப்படுத்துவதாக இந்த புதிய கொள்கை இருக்கும் என்று அவர் கூறினார்.

மதுபான தரத்தை அறிவியல்பூர்வமாக பரிசோதித்தல், விற்பனையை டிஜிட்டல்மயமாக்குதல், சட்டவிரோத விற்பனையை தடுத்தல் மற்றும் உரிமம் வழங்குவதில் வெளிப்படைத் தன்மையை கடைபிடித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக புதிய கலால் வரி கொள்கை இருக்கும் என்றும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவு நிறைவடைகிறது.

இதையொட்டி, திருவள்ளூர் மாவட்ட மீனவர்கள் நாளை முதல் மீன்பிடிக்க செல்ல படகுகளை தயார் நிலையில் வைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

கிரிப்டோ கரன்ஸியில் முதலீடு செய்து, சிலர் வரிஏய்ப்பு செய்துள்ளது குறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம் விசாரணை நடத்தி வருகிறது.

கணக்கில் காட்டப்படாத வருமானத்தை மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிவர்த்தனைகளில் சிலர் ஈடுபடுவதாக வெளியான தகவலை அடுத்து இந்த விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அந்த வாரியம் கூறியுள்ளது.

வருமான வரிச் சட்டத்தை பின்பற்ற தவறிய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அந்த வாரியம் தெரிவித்துள்ளது.

கணிசமான எண்ணிக்கையிலான நபர்கள் இந்த வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாமல் குறைந்த விகிதத்தில் ஈட்டப்பட்ட வருமானத்திற்கு வரி வழங்குவதன் மூலம், வருமான வரிச் சட்டத்தின் விதிகளை மீறியுள்ளதாக மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தரவு பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது.

>>>>>><<<<<<

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள **Kuril** தீவுகளில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவையில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது

நிலநடுக்கத்தின் மையம் கடலுக்கு அடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் இருந்ததாக அந்நாட்டின் தேசிய புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

சேதங்கள் பற்றிய விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

இந்நிலையில், மியான்மரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது, இது ரிக்டர் அளவையில் 3 புள்ளி நான்காக பதிவானது.

நிலநடுக்கத்தை தொடர்ந்து அதிர்வுகள் உணரப்பட்டதாக அந்நாட்டின் தேசிய புவியியல் மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பெல்ஜியத்தின் **Antwerp** நகரில் இன்று பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும்.

மகளிர் பிரிவில் இந்தியா – ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி இந்திய நேரப்படி இன்று மாலை மணி 5.30-க்கு லண்டனில் தொடங்குகிறது.

>>>>>><<<<<<

உலக கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவின் **Surchi Singh** மகளிருக்கான 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெறும் இப்போட்டியில், இந்தியா பெறும் முதல் தங்கப்பதக்கம் இதுவாகும்.

ஏற்கனவே இந்தியா 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>>END<<<<<<